பத்திரிக்கைசெய்தி

பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும்(போக்சோ) சட்டம் 2012ன்கீழ் பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளின் போது தேவையான ஆதரவு மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக "**ஆதரவு நபர்கள் (Support Persons)**" 20 பணியிடங்கள் கீழ் குறிப்பிட்டுள்ள விவரப்படி மதிப்பூதியம் அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக நிரப்பப்பட உள்ளதால் அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கல்வித்தகுதி	மதிப்பூதியம்	ஆதரவு நபர் எண்ணிக்கை
குழந்தைகள் நலன்,சுகாதாரம் அல்லது கல்வி தொடர்பான துறைகளில், குறிப்பாக சமூகப்பணி, சமூகவியல், சட்டம், உளவியல், குழந்தை வளர்ச்சி அல்லது குழந்தைகள் நலனுடன் தொடர்புடைய பிற பொருத்தமான துறைகளில் முதுகலைப் பட்டம் பெற்ற எந்தவொரு நபரும் விண்ணப்பிக்கலாம். (அல்லது) குழந்தைகள் கல்வி, வளர்ச்சி, சுகாதாரம் அல்லது பாதுகாப்பு தொடர்பான பணிகளில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்ற பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம்.	ஒரு வழக்கிற்கு ரூ.10,000 /-	20

முகவரி : மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
அறைஎண்.131,முதல்தளம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
சிவகங்கை 630562.

தொலைபேசி : 04575-240166

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கல்வி தகுதிக்கான அனைத்துச் சான்றிதழ்கள், புகைப்படம் மற்றும் அனுபவ சான்றிதழ்கள் போன்றவற்றின் நகல்களுடன் 25.11.2026 அன்று மாலை5.45-க்குள்மேற்குறிப்பிட்ட அலுவலக முகவரிக்கு வந்து சேர வேண்டும். விண்ணப்பங்களை https://sivaganga.nic.in என்ற இணையதளத்தின் வேலைவாய்ப்பு பிரிவு பகுதியின் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களின் ஒளிநகலுடன்,தபால் மூலமாகவோ அல்லது கொரியர்மூலமாகவோ குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் உரியசான்றுகள், இணைக்கப்படாத விண்ணப்பங்கள்யாவும் முன் தகவலின்றி நிராகரிக்கப்படும். இது தொடர்பான எந்தவொரு கடிதப்போக்குவரத்தும் மேற்கொள்ளப்படமாட்டாது.

AKASHP
மாவட்டஆட்சியர்,
சிவகங்கை.